Registered as a News paper in Ceylon

விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 221

யாழ்ப்பாணம் புரட்டாசி 3 ஆங்கிலம் 19 செவ்வாய்க்கிழமை (19-9-72)

பச்சை சந்தனம்
பத்திரத்தினுல் அரைக்கப்பெற்ற
நறுமணம் கமழும்
பச்சை சந்தனம்
எப்பொழுதும்
பெற்றுக்கொள்ளலாம்
ஆ. இராசையா அன் சன்ஸ்
(மருந்துக்கடை)
69, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

JAFFNA
LIBRARY

கரையூரில் அமைதி காண இன்று சமரச மகாநாடு

குழந்தைகளைக் கடத்தினால் மரணதண்டனை!

கொழும்பு, திங்கள் குழந்தைகளைக் கடத்திச் செல்வோருக்கு மரணதண்டனை விதிக்கப்படும். அவசரகால சட்டத்தின் கீழ் இதற்கான ஷரத்து ஒன்றை சேர்ப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

குழந்தைகள் காணமல் போவதுபற்றி சமீபகாலமாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளின் காரணமாக அரசு இந் நடவடிக்கையை எடுக்கவிருக்கின்றது.

இப்பொழுதுள்ள சட்டப்படி ஆட்களைக் கடத்துபவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கும் ஷரத்துக்கள் இல்லாததால் புதிய ஷரத்தொன்றை மசோதாவில் சேர்ப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது. ஆட்களைக் கடத்திச்சென்று குற்றவாளிகளாகக் காணப்படுகின்றவர்களுக்கு மரணதண்டனை விதிக்கும் ஷரத்து அமுலுக்கு வந்தால் குழந்தைகள் காணமல் போவது முற்றுப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

சூதாட்டத்தில் ஈடுபட்ட 8 பேர் அகப்பட்டனர்!

மாவிட்டபுரம், திங். சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் 8 பேர்கொண்ட கோஷ்டியொன்றை சுன்னாகம் பொலிஸ்நிலைய சார்ஜன்ட் பி. எஸ். ரத்தினம் கைது செய்தார்.

மல்லாகம் குளமங்கால் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 8 பேர் கொண்ட கோஷ்டியைக் கைதுசெய்த சார்ஜன்ட் பி. எஸ். இரத்தினம் பிரஸ்தாப நபர்களை மல்லாகம் நீதிபதிமுன் ஆஜர் செய்தார். நீதிபதி ௦ பேருக்கும் தலா 20 ரூபாவீதம் அபராதம் விதித்தார்.

0 0 0

சார்ஜன்ட் பொன்னுத்துரை தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கட்டுவனில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 6 நபர்களைக் கைதுசெய்தது. இவர்கள் மல்லாகம் நீதிபதி முன் விசாரணை செய்யப்பட்டு சகலருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ்பகுதியில் பெருகிவரும் சூதாட்டங்களைத் தடைசெய்வதில் சுன்னாகம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். சுதிர்காமநாதன் ஈடுபட்டுள்ளார்

அரியாலை பகுதியில்

சீவல் தொழிலாளர் வேலை நிறுத்தம்

7 தவறணைகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், செவ்வாய் அரியாலைப் பகுதியில் உள்ள 300 சீவல் தொழிலாளர்கள் கடந்த 3 தினங்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் உள்ள 7 கள்ளுத்தவறணைகள் மூடப்பட்டு விட்டன.

அகில இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் திரு. வி. எம். பொன்னையா மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

அகில இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கத்தின் அரியாலைக் கிளையினர் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவருவதாகவும் தினமும் சீவும் கள்ளை தவறணைக்கு கொடுக்க மறுத்து விடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழிலாளர் தாங்களாகவே குத்தகைக்கு எடுத்த சீவும் மரங்களுக்கு பணம் கொடுக்காததனால் மரச் சொந்தக்காரர்கள் அம்மரங்களில் கள்ளிறக்க வேண்டாமென அறிவித்

5-ம் பக்கம் பார்க்க

கலகப் பகுதிகளை அரசாங்க பொலிஸ் அதிபர்கள் பார்த்தனர்

யாழ்ப்பாணம், செவ். கோஷ்டிச்சண்டையால் சீர்குலைந்து அச்சத்துடனும் ஐயத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் கரையூர்ப் பகுதிக்கு வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. லியனகேயும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவும் நேற்றுப் பிற்பகல் சென்று பார்வையிட்டனர்

கரையூர்ப்பகுதியில் மீண்டும் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சியில் வடபகுதி பொலிஸ் அதிபரும் அரசாங்க அதிபரும் ஈடுபட்டுள்ளனர்

இது சம்பந்தமாக வடபகுதி பொலிஸ் அதிபர் திரு லியனகே இன்று மாலை கரையூர்ப்பகுதிப் பெரியார்களையும் பிரமுகர்களையும் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டுவதற்கு ஒழுங்கு செய்திருக்கிறார். யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள், நகரமேயர், தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்கள் முக்கிய செனட்டர்கள் சமய சமூகத் தலைவர்கள் ஆகியோர் இந்த மகாநாட்டில் கலந்துகொள்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது

யாழ்ப்பாணத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு சி எக்ஸ் மார்ட்டினும் நியமனப் பிரதிநிதி திரு எம் வி சுப்பிரமணியமும் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகராவையும்

5-ம் பக்கம் பார்க்க

தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங். கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் வைத்து இன்று [illegible] பார்க்கப்பட்ட 411-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
23 J 0793 - ரூ. 69,888
2-வது பரிசு
18 E 0791 - ரூ. 27,952
3-வது பரிசு
07 X 0806 - ரூ. 6,888

தலா ரூபா 849.40 சதம் பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

01 A 0145 01 A 0559
17 A 0782 20 A 0051
28 A 0500 01 B 0147
04 B 0929 08 B 0511

(6-ம் பக்கம் பார்க்க)

அமைதியை நிலைநாட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ். கரையூர்ப்பகுதியில்தோன்றியுள்ள துரதிர்ஷ்ட சம்பவங்களுக்காக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா கவலை தெரிவித்துள்ளார் அங்கு அமைதியேற்படுவதற்குப் பொதுமக்கள் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இவ் விஷமிகளின் பொறுப்பற்ற செயல்களினால் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து அமைதியான வாழ்க்கையை விரும்பும் அப்பாவிப் பொதுமக்களும் அவதிக்குள்ளாக நேரிட்டிருப்பதையிட்டு அரசாங்க அதிபர் வருத்தம் தெரிவித்தார்

கரையூரில் கலைப்பு ஏற்படுவதற்கும் கைக்குண்டுகள் வீசப்படுவதற்கும் காரணமாக இருந்தவர்கள் இருப்பவர்கள் பற்றியும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் நடந்து கொள்வோர் பற்றியும் தகவல் தந்து நிலைமையைச் சீராக்குவதற்கு உதவிபுரியுமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து அமைதியை நிலைநாட்டுமாறு திரு விமல் அமரசேகரா "ஈழநாடு" மூலம் கரையூர்ப் பகுதி மக்களையும் மற்றும் பொது மக்களையும் கேட்டுள்ளார். அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தியவர்களும் ஏற்படுத்துபவர்களும் தண்டிக்கப்படுவார்களென்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மரண அறிவித்தல்

சுப்பம்மாள்

காலஞ்சென்ற கருப்பன் செட்டியாரின் அன்பு மனைவியும் சுப்பையா செட்டியார், சங்கரன், இராசையா, இராமசாமி, பரமசிவம், சீரம்மாள், இராமுத்தாய் ஆகியோரின் அன்புத் தாயாரும், அழகிரி செட்டியார், சின்னப்பன் செட்டியார் ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 380 காங்கேசன் துறைவீதி இல்லத்திலிருந்து இன்று (19-9 72) காலை 10-00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: V. K S. சகோதரர்கள்.

8483

வெல்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி- ஜெயலலிதா
நடித்த
குருதட்சணை
தினசரி மாலை 4-15
சனி, ஞாயிறு 10-30
STUNT MAN
(color- adults only)

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p.m.
Lauren Hardy
4 CLOWNS
தினசரி இரவு 9-45
எம். ஜி. ஆர்-
ராஜசுலோசனா
எம். ஆர். ராதா
நடித்த
நல்லவன் வாழ்வான்

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30 இரவு 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜி. வரலட்சுமி
நடித்த
ஹரிச்சந்திரா
(புதிய கொப்பி

நியூ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி ப 2-30
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
நடித்த
நேர்வழி

ராஜா
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த
முகூர்த்த நாள்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.— ஜெயலலிதா
தனிப்பிறவி

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி—சரோஜாதேவி
தினசரி 4 காட்சிகள் நடித்த
குலவிளக்கு

மகத்தான 3-வது வாரம்
RIO 70 MM
நகரமண்டபம்
யாழ்ப்பாணம்
தினசரி மாலை 4-45, 7-15, 9-45
சனி, ஞாயிறு, காலை 10-30
CIRCUS ON PARADE
சேர்க்கஸ் ஒன் பரேட்
Schools:- Contact management for special shows at concession rates
பாடசாலைகள்! விசேஷகாட்சி, சலுகை கட்டண விகிதங்களுக்கு மனேஜருடன் தொடர்பு கொள்க

வெலிங்டன் (யாழ். நகர்) **லிடோ**
தினசரி 2-30, 6-30, 10-00. தினசரி காலை 10-00
சனி, ஞாயிறு 10-30. மட்டும்
★ எம். ஜி. ஆர்
★ ஜெயலலிதா
அசோகன் லக்ஷ்மி
மனோகர் சோ
வி. கே. ராமசாமி
நடித்த

குமரிக் கோட்டம்

யாழ் லிடோ திரையில்
தினசரி மாலை 4-45 7-15 இரவு 9-45
கே(ர்)வின் மத்தூஸ்
நடித்த
த கில்லர் லைக்ஸ் கன்டி
THE KILLER LIKES CANDY
(டெக்னிக்கலர்-டெக்னிக்கஸ்கோப்)

வரி விளம்பரம்

தேவை

வேளாள வகுப்பைச் சேர்ந்த 30 வயதிற்கு மேற்படாத செவ்வாய்க் குற்றமுள்ள மணமகள் தேவை. தகுதியுள்ளோர் சாதகக் குறிப்பையும் விலாசத்தையும் அனுப்பி வைக்கவும். விளம்பர இல: 4330 C/o ஈழநாடு லிமிடெட், யாழ்ப்பாணம். 4330

14 வருடம் [illegible] தமிழ் ஆங்கில வருமானவரி கணக்குப்பார்த்தல் எழுதல் சம்பந்தமான வேலைகளில் அனுபவமுள்ளவர் யாழ்ப்பாணப் பகுதியில் நிரந்தரமாக வேலை பார்க்க விரும்புகின்றார். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4338 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4338

விற்பனைக்கு

G. C. B. சாதாரணம் புதிய முறை பௌதிக இரசாயனம் புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப 125 வினாக்களும் விடைகளும். விலை 4 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம் — புத்தகசாலை, யாழ்ப்பாணம். 4800

கோழிப் பண்ணைக் குரிய (ஆயிரம் கோழிகள் வரை) சகல பொருட்களும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 221/3 கண்டி வீதி, அரியாலை யாழ்ப்பாணம். 4339

பயிற்சி

வாகனம் ஓட்டுதல், எல்லாவித வாகனங்களும் ஓட்டிச் செல்வதற்கும், விஞ்ஞான முறைப்படி மெக்கானிக் கற்பித்துத் தாமதமின்றி லைசென்சும் எடுத்துக் கொடுக்கப்படும், தொடர்பு கொள்ளவும்! ஜூஜா லேனேசில், பார்த்தன் சந்தி, இவிதொழில், 33, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 4335

வாடகைக்கு

கொழும்புத்துறை பிரதான வீதியில் நவீன வசதிகளோடு கூடிய ஒரு பகுதி வீடு (Anex) வாடகைக்கு உள்ளது. ஓய்வு பெற்ற தம்பதிகள் விரும்பப்படுவர். விளம்பர இல: 4329 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 4329

சாந்தி சுன்னாகம்
தினசரி 6 30, இரவு 9-30
சிவாஜி- ஜெயலலிதா
நடித்த
கந்தன் கருணை
(கலர்)
செவ். புதன் மாலை 4-15
TASTE THE BLOOD
OF
DRACULA
(Color)
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

மனோகரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, இரவு 10
முத்துராமன் - அசோகன்
நாகேஷ், புஷ்பலதா நடித்த
நல்வரவு
Daily at 4-30 p. m.
Sat. and Sunday 10-30am
William Holden
in
WILD BUNCH
(Color-Scope)

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு பி. ப. 2-30
எதத் சூரயா
அதத் சூரயா
(சிங்களம்)
Daily 4-30 p. m.
THE VOYEUR

தமிழர்கள் மத்தியில் 'ஹிப்பி' நாகரீகம்!

சிவசிதம்பரம் கவலை

வெள்ளவத்தை, திங்கள் "தமிழர்களுடைய பாரம்பரியக் கலைகள் இப்போது கொலைசெய்யப்பட்டு ஹிப்பி நாகரீகம் மேலோங்கிவருகிறது. இது எமது இனத்தின் வளர்ச்சிக்குத்தான் தடைக்கல்லாக இருக்கும் தமிழர்களுடைய புதிய இள[illegible] இலக்கியத்திற்குக் கலைகள் வளர்க்கப்படவேண்டும். புதுக் கலையும் உருவாக வேண்டும்."

இவ்வாறு முன்னாள் உடுப்பிட்டி எம். பி.யும் உப சபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற நில அளவைத் திணைக்கள இந்து சங்கம் நடாத்திய முத்தமிழ் விழாவின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

உதவி நில அளவை அதிபதி திரு. செ. விசாகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில்: "தமிழ் நாட்டில் மொழிப் பற்றும் விடுதலை உணர்வும் கொண்ட ஓர்பக்கம் கலைகள் முன்னேற்றத்தால் வளர்ந்துவந்தது. இந்த உதாரணத்தை நாமும் பின்பற்றவேண்டும்" என்றார்.

திரு. ஈழவேந்தன் 'வள்ளுவர் கொண்ட காதல்' என்ற தலைப்பில் பேசுகையில் "பைரன், ஷெல்லி போன்ற கவிஞர்களையும் விஞ்சுகின்ற காதல் உணர்வு வள்ளுவனின் குறள்களில் உண்டு" என்றார். மேலும் பல ஆங்கில அறிஞர்களின் உதாரணங்களையும் எடுத்துக்காட்டித் தமிழின் சிறப்பையும் பெருமையையும் இவர் விளக்கி பேசினார்.

இசை நிகழ்ச்சிகளில் திரு சி. ஸ்ரீதாஸின் புல்லாங்குழல் இசையும், சரவை ஏடு கோஷ்டியினரின் 'சங்கர்' என்ற நாடகமும், நில அளவைத் திணைக்களத்தினரின் 'கண்டுக்கு வெளியே' என்ற நாடகமும் இடம்பெற்றன. திரு. ஆ. சிவதாசன் நன்றியுரை சொன்னார்.

மண்ணெண்ணை தேசியமாக்கலில்

ஈராக் மக்களுடன் சர்வதேச கூட்டொருமை மகாநாடு

கொழும்பு, திங்கள் ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி தொடங்கி 18-ந் திகதி வரை பாக்தாதில் நடைபெற்ற மண்ணெண்ணை தேசியமாக்கலின் ஈராக் மக்களுடன் கொள்ளும் கூட்டொருமைக்கான சர்வதேச மகாநாட்டில் வழக்கறிஞர் த. துரைசிங்கம் கலந்து கொண்டபின் இலங்கை திரும்பினார். ஏகாதிபத்திய தாபனங்களின் ஏகபோக உரிமையின்று தமது மண்ணெண்ணெய் வளத்தை மீண்டும்பெற்ற ஈராக் மக்களின் உரிமையை ஆதரித்தே இம்மகாநாடு பக்தாத் நகரில் நடாத்தப்பட்டது. உலக சமாதான மன்றம் ஆப்ரிக்க, ஆசிய கூட்டொருமை நிறுவனம், இராக் குடியரசின் சமாதானத்திற்கும் கூட்டொருமைக்குமான தேசிய மன்றம் ஆகிய பெருங்கழகங்களின் ஒருமைப்பாட்டில் இம்மகாநாடு நடாத்தப்பட்டது. உலக சமாதான மன்றத்தின் அங்கத்தவரான திரு. துரைசிங்கம் ஸ்ரீலங்கா சமாதான மன்றத்தின் பிரதிநிதி என்ற முறையிலும் சர். ராஜேஸ்வரி ஆபிரிக்க ஆசிய கூட்டொருமைக் கழகத்தின் தூதுவர் என்ற ரீதியிலும் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர்:

இவ்வாண்டு ஜூன் மாதத்தில் ஈராக் அரசாங்கம் தன்னாட்டில் உள்ள அந்நிய பெட்ரோலியத் தாபனங்களின் மண்ணெண்ணெய் வயல்கள் அனைத்தையும் தேசியமயமாக்கியது. இதன்மூலம் அந்நிய நிறுவனங்களின் லாபத்தைப் பெருக்க வைப்பதற்குப் பதிலாக ஈராக் நாட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். ஈராக் நாட்டின் எண்ணெய் வளம் தேசியமயமாக்குவதற்குரிய நடவடிக்கைகளை ஏனைய வெளிநாட்டு கம்பனிகள் எதிர்க்கின்றன: வெளிச் சக்திகள் இதற்குப் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கின்றன.

திரு. துரைசிங்கம் தனது பேச்சில் இலங்கை 1961ல் பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னை விடுவித்து எண்ணெய் இறக்குமதியையும் விநியோகத்தையும் தேசியமயமாக்கிவிட்டது என்றார்: அமெரிக்க, பிரித்தானிய கம்பெனிகள் ஏராளமான லாபத்தைப் பெற்று இலங்கை பெற்றோல் கூட்டுத்தாபனத்தை பல வகையில் தடை செய்தது. இத்தகைய இன்னல்கள் இடையிலும் இலங்கை வெற்றி பெற்றது: திரு. துரைசிங்கம் தனது பேச்சைத் தொடர்கையில், இலங்கை தன் பூரண ஒத்துழைப்பை ஈராக் எண்ணெய் வளமாக்கப்படுவதற்கு நல்கும் என்பதைத் தெரிவித்தார்.

4 கல்லூரிகளின்

மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரிகளும் ஒன்று சேர்ந்து ஒரு மெய்வல்லுனர் போட்டியை நடாத்த விருக்கின்றன.

இந்த மெய்வல்லுனர் போட்டி இம்மாதம் 22ம், 23ம் திகதிகளில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (தே.நி)

0 0 0

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணம் மெய்வல்லுனர் சங்கத்தினர், இம்மாதம் 26ம் 27ம் திகதிகளில் யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே மெய்வல்லுனர் போட்டியொன்றை நடாத்த விருக்கின்றனர்:

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற விருக்கும் இந்தப் போட்டியில் மொத்தம் 11 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடபிராந்திய பொலிஸ் மா அதிபர் திரு: ஐ டி எம் வான்டுலென் கலந்து கொள்கின்றார்.

கடந்த ஆறு வருட இடைவெளியின் பின் மேற்படி சங்கம் மீண்டும் செயல்பட ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தே.நி)

உகண்டா எல்லையில் மூன்று நகரங்கள்

எதிர்ப்படைகளிடம் வீழ்ச்சி

அரசாங்கத் துருப்பினர்கள் தப்பி ஓடுகிறார்களாம்

கம்பாலா செப் 18 உகண்டாவுக்குள் நுழைந்துள்ள அந்நிய படைகள் உகண்டாவின் தென் மேற்கு எல்லையில் மூன்று நகரங்களைக் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

கம்பாலாவுக்கு 100 மைல் தூரத்தில் ஆக்கிரமிப்புப் படைகள் முன்னேறி வந்துகொண்டிருப்பதாக உகண்டா குற்றஞ் சாட்டியுள்ளது.

உகண்டாமீது தான்சானியா படையெடுத்திருப்பதாக உகண்டா தெரிவித்துள்ள குற்றச்சாட்டை தான்சானியா மறுத்துள்ளது. தங்கள் படைகள் எல்லையைத் தாண்டிப்போகவில்லையென்று தான்சானிய ராணுவத் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. முன்னாள் அதிபர் ஒபட்டேயிடமிருந்து அதிகாரத்தை அதிபர் இடி அமீன் கைப்பற்றிய போது தான்சானியாவுக்குத் தப்பிச்சென்ற உகண்டா படைகளும் இந்தப் படையெடுப்பில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று தான்சானியா கூறுகிறது.

எல்லைப்பகுதியில் மூன்று நகரங்கள் தான்சானியா படைகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளதாக உகண்டா அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். சுமார் 1000 பேர் கொண்ட ஆக்கிரமிப்புப் படைகள் தலைநகர் கம்பாலாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். இந்தப் படைகளில் வெள்ளையர்களும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

எல்லைப்பகுதியில் அங்கோலே என்ற நகரின் ராணுவ நிலை அந்நிய படைகளிடம் வீழ்ந்துவிட்டதாகவும் இதனால் கம்பாலாவை நோக்கிய பாதை திறக்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகின்றது. தலைநகர் கம்பாலாவில் வீதிகளில் தடைகள் வைக்கப்பட்டுள்ளன. ராணுவம் ரோந்துசுற்றி வருகின்றது.

எல்லையில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாகவும் உகண்டா படைகள் 4 யுதங்களைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடிப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஆசியாக்காரர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் படையெடுப்பு நடைபெறுவதாக உகண்டா அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

19 பிரிட்டிஷ் பிரஜைகள் கைது

பிரிட்டிஷ் பிரஜைகள் 19 பேரை உகண்டா அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர் என்று பிரிட்டன் ஆசிய சேவை தெரிவித்துள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் பல பத்திரிகையாளர்களும் இருக்கிறார்களாம்.

உகண்டா எல்லையில் போர் நடைபெற்றுவந்த போதிலும் பிரிட்டிஷ் பாஸ்போர்ட் வைத்திருக்கும் ஆசியாக்காரர்களை விமானத்தில் கொண்டுசெல்லும் பணிகள் ஆரம்பமாகிவிட்டதாக கூறப்படுகின்றது. 193 பிரயாணிகளைக்கொண்ட முதல் கோஷ்டி எல்லைச் சண்டை காரணமாக 2 மணிநேரம் பிந்தியே புறப்பட நேர்ந்ததாகக் கூறப்பட்டது.

'சமயப்பற்று மேலோங்க இது நல்ல நடவடிக்கை'

கொடித்தின விழாவில் காரியாதிகாரி

மீசாலை, திங்கள் "சைவசமயத்திலுள்ள ஆர்வம் இளைஞர்களிடையே குன்றி வருகின்ற இந்தக் காலத்தில் சைவசமயப்பற்று நன்கு [illegible] சைவசமய நெறியைக் கடைப்பிடித்து புனித வாழ்வு மக்களிடையே மலரவும் செய்வதற்காக இந்த சனசமூகம் எடுத்துவரும் பெருமுயற்சி சைவசமயச் சூழலில் திருப்பத்தை உண்டுபண்ணும் என்பதற்கு ஐயமில்லை."

என்று சாவகச்சேரி [illegible] கோவில் முன்பாக இந்த வாலிபர் சங்கக் கொடி விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. ஆர் சிதம்பரப்பிள்ளை கூறினார்.

சாவகச்சேரி நகரசபை அங்கத்தவர் திரு. எஸ் கே. மகாலிங்கம் பேசுகையில் பின்வருமாறு கூறினார்.

"பல சைவப் பெரியார்கள் வாழ்ந்து சைவம் தமிழ்த் தொண்டு செய்த நாடு எமது நாடு. ஆனால் அவர்கள் செய்த தொண்டையும் நல்லுயரிய வழிகளையும் காலப்போக்கில் நம் நாட்டவர் பின்பற்றத் தவறியதால் சைவசமய நெறி கீழ்நிலையடையும் சந்தர்ப்பம் நேரிட்டது. சமய நெறி முறையிலே நாட்டின் அன்பு ஒற்றுமை சௌகரியம் யாவும் எவ்வளவு குறைந்து தீய செயல்கள் மலிந்து வந்தன. இந்த நிலைமாறி சைவத்தையும் அதற்கு உறுதுணையாக தமிழ்மொழியையும் நாம் பேணிக் காப்பாற்றி வர இந்த வாலிபர் மன்றம் செய்யும் கொடித்தினம் மிகப் பயனளிக்கும். சைவமும் தமிழும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உதவியுள்ளன. இவை ஒன்றை வளர்த்தால் மற்றது வளரும். ஒன்று தேய்ந்தால் மற்றது தேயும் என்ற குறிக்கோளுடன் நாம் அனைவரும் இரண்டு தொண்டு செய்து சைவத்தையும் தமிழையும் தமிழினத்தையும் காப்பாற்ற இது ஒரு தகுந்த சந்தர்ப்பம் என்று கூறினார்.

"சைவசமய தத்துவம் இதுதான்"

மானிப்பாய், திங்கள் "இறைவனைக் கலைவடிவிலே கண்டு கலைகளையும் தமிழையும் அவனுக்கு அர்ப்பணிப்பதே சைவசமயத்தின் தத்துவமும் கலையுடனான பக்தி நெறியுமாகும்" என இளைப்பாறிய அரசாங்க அதிபர் உதவியாளர் திரு. துரையப்பா ஆனைக்கோட்டை ஞானவைரவர் கோவிலில் நடைபெற்ற திரு. க. சுப்பிரமணியன் எழுதிய மூத்த விநாயகர் வெண்பா நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நூலாசிரியர் திரு. சுப்பிரமணியனிடம் திரு. துரையப்பா முதற்பிரதியை வாங்கினார்.

இவ்வைபவத்தின் பின் வைரவப்பெருமான் ஆனைக்கோட்டைக் கிராமத்தைச் சுற்றி திருவுலா வந்தார்.

யாழ்ப்பாணம்

வான்நிலையத்தில் தாக்குதல் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், செவ். பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த வான்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து தாக்கப்பட்ட பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

நியமன எம். பி. திரு எம். சி. சுப்பிரமணியத்தின் கார் வல்லையில் கைக்குண்டு வீச்சுக்கு இலக்கானதைத் தொடர்ந்து இச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் பெரிய கடை வான் நிலையத்திற்குள் வான்கள்மீது பலாத்கார சம்பவங்கள் நடைபெற்ற போது பிரயாணிகள் அங்குமிங்குமாகச் சிதறியோடினர். இங்கு நின்றவைகளும் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனவாம்.

பருத்தித்துறை வீதி குருநாதசுவாமி கோவிலடியில் வைத்து கடந்த வியாழக்கிழமை இரு வான்கள் தாக்குதலுக்குள்ளாகின.

புதிய உப்பளம்

கொழும்பு, திங்கள் புத்தள என்ற இடத்தில் உப்பளம் ஒன்று அமைப்பதற்கு உப்புக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. 850 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும் இந்த உப்பளத்தில் 800 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்.

அரசாங்க ஊழியரின்

ரயில்வாரண்ட்; வைத்திய வசதி விரைவில் ரத்தாகும்?

கொழும்பு, திங்கள் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புகையிரத வாரண்டுகள், வைத்தியசேவை வசதிகள் போன்றவற்றில் விரைவில் மாற்றம் செய்யப்படவிருப்பதாக நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கூறியுள்ளார்.

அரசாங்க இலாகாக்கள், கூட்டுத்தாபனங்கள் தனியார்துறை ஆகியவற்றில் வேலைசெய்யும் சகலருக்கும் ஒரு முகப்படுத்தப்பட்ட 'தேசிய சம்பளத் திட்டத்தை' விரைவில் அமுல் நடத்துவதுபற்றி அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகக் கூறிய நிதி அமைச்சர், இச் சம்பளத் திட்டம்பற்றிய விளக்கங்களையும் தெரிவித்தார். [illegible] மாநாட்டுக்குப் புறப்படுமுன்னர் அமைச்சர் தமது அமைச்சக காரியாலயத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டினார்.

நிதி அமைச்சர் கூறியதாவது:-

தற்பொழுது ஊழியர்கள் ஒருபகுதியினர் அதிக வசதிகளை அனுபவிக்க மற்றொரு பகுதியினர் துன்பத்தில் கஷ்டப்படுகின்றனர். இந்நிலைமை மாறவேண்டும். சகலதுறை ஊழியருக்கும் சமசம்பள திட்டத்தை அமுல் நடத்தும் திட்டத்தின் ஆரம்பக்கட்டமாகவே கடந்த ஜனவரி முதல் அரசாங்க ஊழியருக்கு இருந்துவந்த பென்ஷன் திட்டம் ரத்துச்செய்யப்பட்டது. இதுபோலவே ஏனைய சலுகைகளும் மாற்றப்படவிருக்கிறது.

அமைச்சர் கெனமனுக்கு வெள்ளிவிழா கொண்டாட்டம்

கொழும்பு திங்கள் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு பீட்டர் கெனமன் கொழும்பு மத்திய தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து இருபத்தைந்து வருடங்கள் சேவையாற்றி வருவதைப் பாராட்டுமுகமாக இம்மாதம் 20ம் திகதி கொழும்பு நகரசபை மண்டபத்தில் [illegible] தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பொதுக்கூட்டத்தில் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கலந்துகொள்வார். ஐக்கிய முன்னணியின் தொழிற்சங்கங்கள் அத்தனையும் கெனமனின் பாராட்டு விழாவில் கலந்துகொள்ளும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் திரு டி பி இலங்கரத்தின (வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர்)வும் திரு ஹேரத் விக்கிரமசிங்காவும் சொற்பொழிவாற்றுவார்கள். லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் திரு டோரிக் சொய்சாவும் திருமதி விவியன் குணவர்த்தனாவும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் டாக்டர் எஸ் ஏ விக்கிரமசிங்க (தலைவர்) திரு எம் ஜி மெண்டிஸ், திரு வீ பொன்னம்பலம் ஆகியோரும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

திரு பீட்டர் கெனமன் ஞாபகார்த்த மண்டபம் ஒன்று அமைக்கவும் கொழும்பு நகரவீதி ஒன்றுக்கு அவரது நாமம் சூட்டவும் இன்னும் பலவிதத்தில் அவரைக் கௌரவிக்கவும் 15 பேர் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது.

கி. ச. உறுப்பினர் மீது நடவடிக்கை

எழுவைதீவு, திங்கள் கிராமசபைத் தலைவரையும் சபையையும் அவமதிக்கும் விதத்தில் கிராமசபைக் கூட்டத்தில் நடந்துகொண்டதாக குற்றஞ்சாட்டி எழுவைதீவு கிராமசபை 3ம் வட்டார உறுப்பினர் திரு. எஸ் அந்தோனி முத்துவை ஒருமாத காலத்திற்கு சபை நடவடிக்கைகளில் பங்குகொள்ள அனுமதிப்பதில்லை என்ற தீர்மானம் எழுவைதீவு கிராமசபையின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது. திரு. சி. சம்பு கொண்டுவந்த இப் பிரேரணையை கி. ச. தலைவர் ஆமோதித்தார்.

இவர்கள்தான் சிபார்சு செய்வர்

கொழும்பு, திங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகசபைக்கு அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் மாத்திரம் பொதுமக்களின் பிரதிநிதிகளாக உறுப்பினர்களைச் சிபார்சு செய்ய முடியுமென கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொரில்லாக்களை லெபனன் வெளியேறச் சொல்லவில்லை

பேரூத் செப் 18. லெபனன் அரசுக்கும் பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்குமிடையில் கருத்து வேற்றுமை நெருக்கடியான ஒரு கட்டத்தை அடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கொரில்லாக்களை முகாம்களிலிருந்து வெளியேறும்படி லெபனன் அரசு உத்தரவிட்டிருப்பதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து இந்த நெருக்கடி உருவாகியது.

கொரில்லாக்களுக்கும் லெபனன் அரசாங்கத்துக்கும் இடையில் உறவுகள் மோசமாகாமல் தடுப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அடிப்படையில் நேற்று லெபனன் பிரதம மந்திரி திரு [illegible] கொரில்லாக்களின் தலைவர் யாஸிர் அரபாத்துடன் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைகளின் பின்னர் லெபனன் பிரதமர் வெளியிட்ட ஒரு செய்தியில் கொரில்லாக்களை முகாம்களிலிருந்து வெளியேறும்படி தாம் உத்தரவிடவில்லையென்று கூறியுள்ளார். ஏனைய அரபு நாடுகளைப்போலவே பாலஸ்தீன மக்களை லெபனனும் ஆதரிக்கின்றது இவர்களை இஸ்ரேலியர் அழித்துவிடமுடியாது என்று அவர் கூறியுள்ளார்.

லொறி — டிராக்டர் மோதல் 3 பேர் காயம்

யாழ்ப்பாணம், திங்கள்

கச்சேரி-நல்லூர் பாதையில் நாவலர் சந்தியில் ஏற்பட்ட லொறி - மினி டிராக்டர் மோதலில் மூவர் காயமுற்றனர்

மினி டிராக்டரில் வந்த வி. நடராசா என்பவருக்கு கால் முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் எஸ். நாதன் என்பவருக்கு கண்ணில் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. லொறிச்சாரதிக்கு நெஞ்சில் வலி ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. மூவரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர். மினி டிராக்டரில் மோதிய லொறி மாத்திரம் [illegible] மோதி சேதமுற்றுள்ளது

(கே நி)

தொழில்நுட்பக் கல்லூரி கல்வி சீர்படுத்தப்படுகிறது

கொழும்பு, திங்கள்

தொழில் நுட்பக் கல்லூரிக் கல்வியைச் சீர்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கல்வி அமைச்சு நிறுவியுள்ள தேசிய பயிற்சி நிலையத்தின் மூலம் இந்தச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

நாட்டிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரிகளிலும் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை பெற்றுக் கொடுப்பதில் தேசிய பயிற்சி நிலையம் உதவியளிக்கும்.

எனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 500 பேருக்கு இந்த தேசிய பயிற்சி நிலையம் வேலை தேடிக் கொடுத்துள்ளது.

"அர்ச்சகர்களுக்கு பிறப்பொழுக்கம் அவசியம்"

புங்குடுதீவு, திங்கள்

"'கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்றார்கள் நமது முன்னோர்கள். ஆலயமே ஆன்மாவைப் புனிதப்படுத்தும் முக்கிய சாதனம். ஆலயங்களில் பூசை செய்யும் அர்ச்சகர்கள் தமக்குரிய ஒழுக்கங்களை தெரிந்து அவற்றைக் கடைப்பிடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். மறந்த வேதங்களைக்கூடப் பின்பு நினைவுபடுத்திக்கொள்ளலாம். பிறப்பொழுக்கம் குன்றினால் அர்ச்சகருக்கு எல்லாமே கெட்டுவிடும் என்கிறார் திருவள்ளுவர். பக்தர்கள் ஆண்டவனை அணுகுவதற்கு ஏதுவாக நின்று வழிகாட்டவேண்டிய பொறுப்புடைய அர்ச்சகர்கள் பிறப்பொழுக்கம் குன்றாதவர்களாகத் தமக்குரிய சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பது சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக உதவும்".

இவ்வாறு புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவிலில் பிரம்மஸ்ரீ நாகேந்திர சர்மாவுக்கு நிகழ்ந்த ஆசாரியாபிஷேக விழாவில் உரை நிகழ்த்திய புலவர் சமுத்திரன் சிவானந்தன் கூறினார், பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் ஆச்சாரியாபிஷேகம் செய்துவைத்த விழாவுக்குத் தலைமைவகித்தார்.

பேராசான் சி. இ. சதாசிவம்பிள்ளை பேசும்போது "இறைவனுள் ஒன்றியநிலையே இன்றைய இளைஞர் சமுதாயத்தை நல்வழிப்படுத்தமுடியும். இறைவனை இனங்காட்டவேண்டிய அர்ச்சகர்கள் தமது ஞானத்தைப் பல வழிகளிலும் பெருக்கிக்கொள்ளவேண்டும்" என்றார்.

திருவாளர்கள் க. வி. செல்லத்துரை, ந. கந்தசாமி ஐயர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

வட்டுக்கோட்டையில்

மாதர் பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம், செவ்.

பெண்களுக்கு மாத்திரமான திருமுறைப் பண்ணிசை வகுப்பு வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சமூகத் தொண்டரும் வட்டுக்கோட்டை அபிவிருத்திச் சபை உறுப்பினருமான திரு. எஸ். நடராஜா தலைமையில் நிகழ்ந்த இவ்வைபவத்தில் திரு. க. சச்சிதானந்தம், பண்டிதர் வி. நவரத்தினம் ஆகியோர் உரையாற்றினர். இவ்வகுப்பு சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகலில் நடைபெறும். இவ்வகுப்பில் 16 வயதுக்கு மேற்பட்ட பெண்களே அனுமதிக்கப்படுவார்கள்.

இப்பண்ணிசை வகுப்பில் சேர்ந்து பயிலும் பெண்களுக்கு நவீனமுறைத் தையலும் பயிற்றுவதற்கு திரு. நடராஜா ஒழுங்குசெய்துள்ளார்.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பண்ணிசை வகுப்பு வட்டுக்கோட்டை ஆத்தியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள குருபூசை மடத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் பின்னேரத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இசைவளர்ப்பதில் அளவெட்டி முதலிடம்

மாவிட்டபுரம், திங்கள்

"ஒருகாலத்தில் பெரும் வித்துவான்களைக் கொண்டு இசைவளரும் இடமாக வண்ணார்பண்ணை விளங்கியது. இன்று அவ்விடத்தை அளவெட்டி பெற்றுள்ளது. சிறந்த வித்துவான்களை இசை உலகுக்கு அளித்துள்ள பெருமை அளவெட்டிக்கு உரியது" என்று வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. எஸ். அம்பிகைபாகன் அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடந்த கே. எஸ். ஸ்ரீகந்தராசா கே. எஸ். சிவானந்தராசா சகோதரர்களின் இசை அரங்கேற்றவிழாவில் பேசுகையில் கூறினார்.

அளவை இசைக்கலாமன்ற ஆதரவில் திரு. செ. மயில்வாகனம் தலைமையில் இவ்விழா நடந்தது.

இராமநாதன் இசைக் கல்லூரி விரிவுரையாளர் திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர் பேசுகையில் "உண்மையான சங்கீதக் கலைஞராக வேண்டுமானால் கச்சேரிகள் முறைப்படி அமையவேண்டும். இதேவகையில் இவ்விருவரையும் பாராட்ட வேண்டும்" என்றார்.

சங்கீதபூஷணம் பி. முத்துக்குமாரு, அதிபர் எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

வழக்கு ஒத்திவைப்பு

மீசாலை, திங்கள்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர் பிரயாணப் பை ஒன்று வைத்திருந்த சந்தேகத்தின்மீது [illegible] பொலிஸ் சார்ஜன்ட் திரு. செல்லையா என்பவரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார். குறித்த பொருள் [illegible] வீதியில் இருக்கும் ஒருவருக்குச் சொந்தமானதென்றும் பஸ் பிரயாணத்தின்போது களவாக எடுக்கப்பட்டதென்றும் தெரியவந்தது. இதற்குள் ரூபா 185 பெறுமதியான உடுபிடவைகள் இருக்கக் காணப்பட்டன. சாவகச்சேரி நீதிமன்றத்தில் சந்தேகத்தின்மீது குற்றஞ்சாட்டி சார்ஜன்ட் திரு. எம். இராமநாதனால் தொடரப்பட்ட வழக்கு எதிரி சுற்றவாளி என்று கூறியதைத் தொடர்ந்து நீதவான் திரு. என். லோகநாதன் மேல்விசாரணைக்காக வழக்கை ஒத்திவைத்தார்.

வயோதிபர் தற்கொலை!

மீசாலை, திங்கள்

சாவகச்சேரி வடக்கில் 65 வயதுடைய ஒரு வயோதிபர் நச்சுத்திரவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். வ. சிதம்பரப்பிள்ளை என்னும் இவர் தமது மகள் தன்னை அடித்துத் துன்புறுத்தியதை அவமானம் தாங்க முடியாமல் கவலையுற்று இவ்வாறு செய்தாரென்று மரணவிசாரணையில் தெரியவந்தது. மரணவிசாரணை அதிகாரி விசாரணையின்பின் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார்.

வானொலி

செவ்வாய் 19-9-72

(செய்திகள்: காலை 6-50 மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை — வி. தனபாலசிங்கம், 6-35 இஸ்லாமியநற்சிந்தனை — 6-40 அறிவிப்புகள், 6-50 கானாமிர்தம், 7-00 இசைச்சோலை, 7-30 மாகாணச்செய்திகள், 7-35 நாதஸ்வரம் — டி. எஸ். சுப்பிரமணியம், 8-15 இஸ்லாமிய கீதம்.

இரவு 6-10 அறிவிப்புகள், 6-15 அகல்விளக்கு — நடத்துபவர்: சேகர் அன்று. 6-30 மூலவீணை — பி. வெங்கிடசாமி, 7-00 தமிழ் மூலம் சிங்களம், 7-15 சமூகப் புலமும், 7-30 உலகச்செய்திகள் 7-35 மெல்லிசைப்பாடல்கள், 7-45 பேச்சு — யாழ்ப்பாண மாவட்ட நாடக மரபுகள் — கலையரசு க. சொர்ணலிங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 அறிவிப்புகள், 9-30 கலைக்கோலம் — நடத்துபவர்: சாவலூர் ராஜதுரை, 10-00 [illegible].

தொழில் முன்னிலைக் கல்வி மாதிரிப்பாடம்

கொழும்பு, திங்கள்

புதிய கல்வித்திட்டம் இவ்வாண்டு ஆறும் வகுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழில் முன்னிலைப் பாடம் 1 தொழில் முன்னிலைப்பாடம் 2 என்ற இரு பாடங்களை இடம்பெற்றுள்ளன. 1975ம் ஆண்டில் தேசிய கல்விப் பொதுத் தராதரப்பத்திர வகுப்புக்கு இப்பாடங்கள் பரீட்சைக்கு இருக்கும். தொழில் இல்லை என்ற நிலைமை இல்லாமல் போகுமென கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

தொழில் முன்னிலைப் பாடம்-2 என்பதற்கு மாணவர் வசிக்கும் சூழலுக்கு ஏற்றபாடம் தெரியப்பட வேண்டும். அப்பாடம் பல வேறு வகையான பாடங்களுடன் தொடர்பு படுத்தப்படும் முறையான பாடவிதானத்தை ஆசிரியர் தாமாகவே அமைக்க வேண்டும். ஒரே இனமான பாடத் தெரிவுகளை ஒழுங்குபடுத்திய பின்பு பொதுவான பாடவிதானத்தை பாடத்திட்ட அபிவிருத்திச் சபை ஒழுங்கு செய்துகொடுக்கும்.

ஆசிரியர்களின் கருத்தறிந்து பெற்றோரின் ஒத்துழைப்புக்கும் ஏற்றதான கல்விப்பீட முறையில் பாடங்களைப் புதுஆய்வு செய்கின்றனர்; வித்தியாதிபதிகளும் வட்டாரக்கல்வி அதிகாரிகளும் ஊக்கம் அளிக்கின்றனர்.

கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய ஆசிரியர்கள் 18-9-72 மாலை 5மணிக்கு மாதிரிப்பாடம் ஒன்றை ஆயத்தம் செய்துள்ளனர். ஆசிரியர்களும் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களும், வித்தியாதிபதிகளும் வட்டாரக் கல்வி அதிகாரியும் மேலதிக நிரந்தரச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபால அவர்களும் சமூகமளிக்கும் பொழுது மூன்று ஆசிரியர்கள் தொடர்புறுத்திக் கற்பிப்பர்.

சிற்றுண்டி வழங்கியபின்பு குளிர்பானம் வழங்கப்படும். குளிர்பானம் குடித்தபின் அடுத்து அப்பானம் எப்படித் தயாரிப்பதென்பதை மாணவர் அறிய வழிவகை ஓர் ஆசிரியையினால் விளக்கப்படும். இன்னோர் ஆசிரியை அதற்குரிய பழம் உண்டாகும் மரம்பற்றி பொது விஞ்ஞானம் போதிப்பார். வியாபார ஆசிரியர் அந்த மரத்தை நடும் முறைகளை விளக்குவார். மேலதிக நிரந்தரச் செயலாளர் இப்பாடம் நடைபெறுவதைப் பார்ப்பதுடன் கல்வி அமைச்சின் புதிய கல்வித்திட்டத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார். இந் நிகழ்ச்சிக்கு அதிபர் திரு. வ. நடராசா தலைமை தாங்குவார். பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. மு. கந்தசாமி நன்றியுரை கூறுவார்.

இன்றைய பலன்

புரட்டாதி மீ 3-ம் திகதி

[19-9-72]

மேஷம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்க நேரிடும்.

ரிஷபம்: காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும் குதூகலமான தினம்.

மிதுனம்: தொழில்துறையில் முன்னேற்றம் காணப்படும் நீண்டநாள் கடன் இன்று தீர்த்திடலாகும்.

கடகம்: மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நண்பர்மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்

சிம்மம்: சிந்தனையின் தாக்குதல் உங்களை சிந்திக்கவைக்கும் அவசரமுடிவை இன்று தவிர்க்கவும்.

கன்னி: நிதி அபிவிருத்தியுடன் நிம்மதி பிறக்கும் பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்தும் உண்டு.

துலாம்: தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும் எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள்.

விருச்சிகம்: இதயத்தில் அமைதி குன்றும் குடும்பத்தில் சிறியபூசல்கள் தோன்றி மறையும்.

தனுசு: எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும் அவசர முடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம்.

மகரம்: ஊதியம் வரும் உற்சாகம் பெருகும் உறவினர் வாழ்த்தும் இதயத்தில் இன்பம் சேர்க்கும்.

கும்பம்: மதிப்பு உயரும் இல்லறத்தில் இனிமை தவழும் அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

மீனம்: ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள், இன்று ஏற்படும் திருப்புமுனை நிம்மதியை அளிக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை இ. வேலுப்பிள்ளை

யூறெக்ஸ்
கொண்டொம்ஸ்
அனாவசிய
கருத்தரித்தலுக்
கெதிரான உங்கள் பாதுகாப்பு
இப்பொழுது எல்லாக் கடைகளிலும், ஒன்று -/25 சதப்படி கிடைக்கிறது.
இலங்கை மாதாவின் இன்றைய தேவை சிறிய குடும்பங்களே!

19 வது தினமாக வங்கிஊழியர்வேலைநிறுத்தம்:

ஆசிரியர் சம்பளம் பெறுவதில் கஷ்டமிராது

உரும்பராய், செவ்வாய் வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்துக்கான காசோலையை வங்கியில் மாற்றுவதில் எவ்வித கஷ்டமும் இருக்காது. தங்கள் காசோலையை வழக்கமாக மாற்றும் வங்கி வேலை செய்யும் நேரத்தைப் பாடசாலை அதிபர்கள் முன்கூட்டியே அறிந்து அந்நேரத்தில் வங்கிக்குச் சென்று காசோலையை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன"

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தாபகக்குழுவினருக்கு மேற்கண்ட தகவலை வடபிரதேச வித்தியா கந்தோர் கணக்காளர் வெளியிட்டார்.

பண்டிதர் ச. பொன்னுத்துரை, க. இராசேந்திரம், அ. பஞ்சாட்சரம் ஆகியோரைக் கொண்ட தாபகக்குழு கஸ்தூரியார் வீதியில் உள்ள கல்விப் பணிமனையில் கணக்காளரைக் கண்டு வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் காரணமாக வங்கி மூலம் சம்பளம் பெறும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் பெறுவதில் எவ்வித கஷ்டமும் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தது.

சம்பளம் வழங்குவதில் ஒரு புதிய வழிமுறைக்கையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஒரு பாடசாலை ஆசிரியர்களுக்குரிய சம்பளம் 5674 ரூபா 60 சதமாகும். 5670 ரூபா மட்டும் வழங்கப்பட்டு 4 ரூபா 60 சதம் தலைமையாசிரியர் சம்பளத்தில் கழிக்கப்பட்டு அடுத்த மாதச் சம்பளத்துடன் தலைமையாசிரியருக்கு வழங்கப்படும். இன்னொரு பாடசாலைக்கு 1836 ரூபா 19 சதமானால் 1835 ரூபா வழங்கப்பட்டு 1 ரூபா 19 சதத்தைத் தலைமையாசிரியர் சம்பளத்தில் கழித்து அத்தொகையைத் தலைமையாசிரியருக்கு அடுத்த மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும். இதுபற்றி விளக்கமான ஒரு கடிதம் பாடசாலைத் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுமென்று கல்விப்பகுதிக் கணக்காளர் தாபகக்குழுவிடம் கூறியதாகத் தெரிகிறது.

வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் இன்றுடன் பத்தொன்பதாவது நாளாக நடைபெறுகிறது.

தீவுப்பகுதியில்

செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையங்கள்

யாழ்ப்பாணம், செவ் தீவுப்பகுதியில் நாரந்தனை, வேலணை மண்டைதீவு ஆகிய இடங்களில் பசுக்களுக்கும் ஆடுகளுக்கும் செயற்கைமுறையில் சினைப்படுத்தும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. செயற்கை முறையில் ஆடுகளுக்கு சினைப்படுத்துதலை இலங்கையில் திருநெல்வேலியில் முதன்முதல் அறிமுகஞ் செய்துவைத்த மிருக வைத்தியர் டாக்டர் எஸ். ஜெயரத்னம் தீவுப்பகுதியில் இந்நிலையங்களை ஆரம்பித்து இம்முறையை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக உழைத்துவருகிறார்.

பசுக்களுக்கும், ஆடுகளுக்கும் செயற்கை முறையில் சினைப்படுத்துவதில் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்து டாக்டர் ஜெயரத்னம் இப்பகுதியில் கருத்தரங்குகளை நடாத்தவும் ஏற்பாடு செய்துள்ளார்.

மண்டைதீவில் கோழிப் பண்ணைகள் அதிகமிருப்பதாகவும் இவ்விஷயத்தில் தீவுப் பகுதியில் மண்டைதீவு முன்னணி வகிப்பதாகவும் கூறிய டாக்டர் ஜெயரத்னம் இதை ஏனைய தீவுப்பகுதி மக்களும் பின்பற்றி கால்நடைகளையும் கோழிகளையும் அதிகரிக்கச்செய்து அதிக வருமானத்தைப்பெற முயலவேண்டுமென்று கூறினார். தீவுப்பகுதியில் பல இடங்களில் செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையங்கள் திறக்கப்படவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

கார் மோதி சிறுமி துடிதுடித்து மாண்டார்!

மாவிட்டபுரம், திங்கள் வீதியால் சென்ற காருடன் மோதுண்ட 6 வயதுச் சிறுமி படுகாயத்துக்குள்ளாகி மரணமானார்.

மயிலிட்டியைச் சேர்ந்த இளவத்துறையின் மகளான சாந்தினி (6 வயது) என்னும் சிறுமி வீதியைக் கடக்கும் நேரத்தில் வீதியில் வந்த காருடன் மோதுண்டு படுகாயத்துக்குள்ளானாள். காயம் அடைந்த சிறுமி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டதும் அங்கு மரணமானார்.

இம் மரணம் குறித்து விசாரணை செய்த மல்லாகம் மாஜிஸ்திரேட் ஜி. சிவானந்தன் வைத்திய அதிகாரியின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டு கார் சாரதியான சிவகுரு ராசையாவை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

இம் மரணத்துக்கான சாட்சியங்களை சார்ஜன்ட் திரு. [illegible] செய்தார்.

சைக்கிளில் சென்ற வயோதிபர் வாழ்வுவழியில முடிந்தது!

மாவிட்டபுரம், திங். சைக்கிள் கார் மோதலில் அகப்பட்ட 60 வயது வயோதிபர் யாழ் வைத்தியசாலையில் மரணமானார்.

சேந்தான்குளம் - இளவாலை வீதியில் சைக்கிளில் சென்ற 60 வயதுடைய [illegible] ஆசீர்வாதம் முன்னால் வந்த [illegible] மோதுண்டதில் காயமடைந்த பிரஸ்தாப நபர் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரணமானார்.

இவரின் மரணம் குறித்து யாழ் - மரணவிசாரணை அதிகாரி எஸ். இராசநாயகம் விசாரணை நடாத்தினார்.

இதையடுத்து பிரஸ்தாப கார் சாரதியான டபிள்யு. ஏ. பிரேமரத்தின நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிபதி 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து 2-ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

இவ்விசாரணைக்கான ஏற்பாடுகளை காங்கேசன்துறைப் பொலிஸ்நிலைய சார்ஜன்ட் திரு ஏ. பி. [illegible] செய்திருந்தார்.

சிவல் தொழிலா..

1-ம் பக்கத் தொடர்ச்சி

நாளைத் தொடர்ந்தே இவ் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதென சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அகில இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கத்தினருக்கும், அரியாலை கள் உற்பத்தி விற்பனவு சங்க உத்தியோகத்தர்களுக்குமிடையில் நேற்று முன் தினம் அரியாலையில் பேச்சுவார்த்தை நடந்ததாக தெரியவருகிறது. இப்பேச்சுவார்த்தையின்போது இரு பகுதியினருக்குமிடையில் சமரசம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படாததைத் தொடர்ந்து இரு பகுதியினரும் அரசாங்க அதிபரை சந்திக்க முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

கரையூர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பொலிஸ் அதிபரையும் நேற்றுக்காலை சந்தித்துப்பேசினர். கரையூர்ப்பகுதியில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்படியும் அவர்களிருவரும் கேட்டுக்கொண்டதாகவும் கரையூரிலுள்ள நிலைமை பற்றி அவர்களிருவரும் தனித்தனியே எடுத்துக்கூறியதாகவும் அறியப்படுகிறது. பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

கரையூர்ப்பகுதியில் மாலை 6-30 மணியிலிருந்து காலை 6 மணிவரை தொடர்ந்தும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதாகவும் இரவில் எவரும் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறவேண்டாமென்றும் பொலிசார் கேட்டுள்ளனர்.

இப்பொழுது நிலைமை ஓரளவு தணிந்துள்ளதாகவும் விரைவில் நிலைமை சீராகி அமைதி ஏற்படலாமென்றும் அரசாங்க உயர் அதிகாரியொருவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கரையூர்ப்பகுதியில் நேற்றும் சில இடங்களில் கைக்குண்டுகள் வீசப்பட்டதுடன் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றன. சின்னக்கடையிலுள்ள சில இறைச்சிக் கடைகள் நேற்றுக்காலை ஒரு கோஷ்டியினரால் சேதப்படுத்தப்பட்டதால் வியாபாரிகள் பயத்தினால் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். இதனால் சந்தை வெறிச்சோடிக் கிடந்தது.

சின்னக்கடைப் பகுதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் சுமார் 25 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று ஆயுதங்களுடன் சென்று சில இறைச்சிக் கடைகளைத் தாக்கியதாகவும் தொங்க விடப்பட்டிருந்த இறைச்சி மேசைகள் வெளியில் தூக்கியெறியப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து வியாபாரிகள் நாலாபக்கமும் ஓடியதாகவும் இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

பொலிசார் அங்கு விரைந்து வந்தபோது அக் கோஷ்டியினர் ஓடி மறைந்துவிட்டனராம்.

இச்சம்பவம் பற்றி மாநகரசபை கமிஷனர் திரு ஏ. ரி. [illegible] நேற்றுக்காலை இறைச்சிக்கடை உரிமையாளர் சார்பில் தான் புகார் செய்ததாக திரு சின்னத்தம்பி கிருஷ்ணன் நேற்றுத் தெரிவித்தார்.

கரையூர்ப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதும் 3 வீடுகள் எரிக்கப்பட்டதுடன் கைக்குண்டுகளால் பல வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. நேற்று கைக்குண்டுகள் இப்பகுதியில் தாராளமாகப் பாவிக்கப்பட்டதாகவும், பொலிசார் வீடுகளையும், வாகனங்களையும் சோதனையிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை கரையூர் பகுதியில் கைக்குண்டுகள் வீசப்பட்ட பின்னர் அங்கு அமைதியை நிலைநாட்டும் பொருட்டு பொலிசார் வானத்தை நோக்கிச் சுட்டனர். அதன் பின் கோஷ்டியினர் ஓடி மறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஒருவர் மரணம்

நேற்று முன்தினம் மோதலின்போது காயமடைந்தவர்களில் ஒருவரான 25 வயது ஜோசப் இராசராசா என்பவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கரையூர்ப் பகுதியைச் சேர்ந்த இவர் கண்டியில் தொழில் புரிந்துவந்ததாகவும் கரையூரில் தனது ஒருவரைச் சந்திக்கச்சென்றபோது காயமுற்றதாகவும் அவரது தந்தையான மரியன் இராசராசா என்பவர் தெரிவித்தார்.

இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை முடிவில் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

......

எழுவைதீவுக்கு தந்திச் சேவை கிடைக்குமா?

எழுவைதீவு, திங்கள் எழுவைதீவு தபாற்கந்தோரில் தந்திப் போக்குவரத்து வசதி செய்யப்படாததால் இப்பகுதி மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். தீவுப்பகுதிகளில் தந்திவசதி இல்லாத இடம் எழுவைதீவு மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

எழுவைதீவு தபாற்கந்தோரில் தந்தி வசதி செய்து கொடுக்கப்படுமென தபாலமைச்சு அறிவித்திருந்தது. ஆயினும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதது குறித்து இப்பகுதி பொதுஸ்தாபனங்கள் கவலை கொண்டுள்ளன. இங்கு வரும் தந்திகள் தபால் மூலமே விநியோகம் செய்யப்படுகின்றன. அவசரத் தந்திகளை படகுமூலம் ஊர்காவற்றுறை சென்றே இப்பகுதி மக்கள் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

......

வசதி குறைவாம்

அல்லைப்பிட்டி, திங்கள் வேலணை மேற்கு [illegible] நிறுவப்பட்டுள்ள [illegible] கள்ளுத் தவறணை பல வசதிக்குறைவுகள் உள்ளதாக பாவனையாளர்கள் குறைப்படுகின்றனர். கள்ளுத் தவறணை ஆரம்பிக்கப்படுமுன் இருந்த ஓலைக் கொட்டிலே தற்போதும் இருந்து வருகிறது. மழை பெய்யும்போது மேற்படி தவறணை வெள்ளத்தினால் நிரம்பிவழிகிறதாம்.

தமிழ் மொழி பெயர்ப்பும் கிடைக்குமா?

பத்திரிகைச் செய்திபற்றி

கூ. பொ. அமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், செவ்வாய் எந்த அமைச்சும் தமிழ் மக்களிடம் கடிதத்தொடர்பு கொள்ளும்போது அரசகரும மொழியான சிங்களத்துடன் தமிழ் மொழிபெயர்ப்பும் கண்டிப்பாக அனுப்ப வேண்டும் என்ற கருத்துற்ற நிருபமொன்றை உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சகல அமைச்சர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளதாக உள்ளூராட்சி உதவி அமைச்சர் திரு நீல்டி அல்விஸ் யாழ்ப்பாணம் எம். பி. திரு. மார்ட்டினிடம் கூறியதாக 15ம் திகதி வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான செய்தி சம்பந்தமாக தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் உள்ளூராட்சி உதவி அமைச்சருடன் கடித மூலம் தொடர்பு கொண்டுள்ளார்.

இச் செய்தி உண்மையாயின் அமைச்சினால் அனுப்பப்பட்ட குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரதி ஒன்றை தமக்கு அனுப்பிவைக்குமாறு பண்டிதர் இரத்தினம் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

தமிழில் எழுதுவோருக்கு தமிழில் பதில் அனுப்புவதென மந்திரிசபை முடிவு செய்துள்ளதாக ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வெளிவந்த செய்தி பற்றி நிதி அமைச்சருடன் தொடர்பு கொண்டதாகவும் அச் செய்தியில் உண்மையில்லை என்று நிதி அமைச்சர் தமக்கு பதில் அனுப்பியிருப்பதாகவும் பண்டிதர் இரத்தினம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

... ...

நிதி அமைச்சர் கூற்று தவறும்

சமாஜ உபதலைவர் என். எம்க்கு தந்தி

குருநகர், திங்கள் வடபகுதியில் கள்ளு மிச்சம் படுவதில்லை என்று அண்மையில் நிதி அமைச்சர் கலாநிதி என் எம் பெரேரா வெளியிட்ட செய்தி பொருத்தமற்றதென்றும் இதுபற்றி தவறான தகவல் ஒன்றை யாரோ நிதியமைச்சருக்குக் கொடுத்துள்ளதாகவும் வடபகுதி கள் உற்பத்தி விற்பனவுச் சமாசத்தின் சமாஜ உபதலைவரும் சாவகச்சேரி சங்கத்தின் தலைவருமான திரு கே. நடராசா தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் தேவைக்கு மேல் கள்ளு மிச்சப்பட்டு வருவதாகவும் இதனால் மிச்சப்படும் கள்ளு சங்கங்களின் வருவாய்க்கு [illegible] இருப்பதாகவும் மிச்சப்படும் கள்ளை சரியான முறையில் பயன்படச்செய்து வடபகுதி கள் உற்பத்தி விற்பனையாளர்களின் வருவாயைப் பெருக்கவும் மேலும் உற்பத்தியை அதிகரிக்கச்செய்யவும் வடக்கில் உடனடியாக ஒரு சாராயவடிசாலையை நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சருக்கு தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும் திரு நடராசா தெரிவித்தார். இது பற்றி யாழ் அரசாங்க அதிபருக்கும் அவர் மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இன்று

[illegible] செவ்வாய் வேலணை இலந்தைவனம் விநாயகர் உற்சவம் இன்றுடன் முடிவுறுகின்றது. இன்று கலை நிகழ்ச்சிகளும் சமயச் சொற்பொழிவுகளும் இடம் பெறுகின்றன. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி விநாயகர் பெருமை என்னும் பொருள் பற்றி உரையாற்றுகின்றார்.

மணிவாசகம்

நாம் விரும்பும்பொருள் நம்மிடம் இல்லாத போழ்து, நம்மிடம் இருக்கும்பொருளை நாம் விரும்பவேண்டும். — புஸ்ரேபுடின்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna Telephone: 389

ஸ்ரீ பரிதாபி வருஷம் புரட்டாதி மாதம்
3-ந் திகதி (19-9-72)

அன்றும் இன்றும்

அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்தான் அரசியல் என்று ஒரு தனித்துவவாளியில் முழங்கினான் ஆங்கில அறிஞன் டாக்டர் ஜோன்சன். இது ஒதுக்கப்பட்ட கூற்றாயிருந்தபோதிலும் பல ஆண்டுகளுக்குப் பின் இதை நோக்குங்கால் டாக்டர் ஜோன்சன் ஒரு தீர்க்கதரிசி என்ற முடிவுக்கு வர இன்றைய உலக அரசியல் நிலை பெருமளவிற்கு உதவுகிறது.

கடந்த சனிக்கிழமை யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சேர் வைத்திலிங்கம் துரைசாமியின் உருவப்படத்தை நீதியரசர் சீ. எஸ். வெர்ணாண்டோ திரைநீக்கம் செய்து பேசியபோது "சேர் வைத்திலிங்கம் துரைசாமி தமது பல தன்னலமற்ற சேவையால் சிறந்த வழக்கறிஞராயிருந்த போதிலும் அத்துறையில் அடையக்கூடிய கீர்த்தியையும் உயர்பதவிகளையும் பொருட்படுத்தாமல் அரசியலில் ஈடுபட்டார். ஆனால் அரசியல் அவரை கைவிட்டுவிட்டது' என்று ஆணித்தரமாகக் கூறியது ஆங்கில அறிஞனின் கூற்றுக்கும் இன்றைய அரசியல் நிலைக்கும் ஓர் வலுத்த கண்டனமாகப் பொருந்தும் கூற்றெனலாம். [illegible] போட்டியில் சிங்களப் பெருமகன் பிரான்சிஸ் டி சொய்சாவைத் தோற்கடித்த இலங்கை அரசாங்கசபையில் சபாநாயகராக 11 வருடங்கள் அரும்பணியாற்றி நாட்டுமக்களின் பெருமதிப்புப் பெற்ற தேசியத் தலைவர்களில் ஒருவரான சேர் வைத்திலிங்கம் துரைசாமி இன்று உயிர்த்து வந்தால் அவருடைய மனக்கவலைக்கு எல்லை உண்டா? 1896ம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டைப் புனரமைத்த அமரர் பாரன் பிரேடி கூபெர்டின் இன்று நடைபெற்ற ஒலிம்பிக் கோரக் கொலைகளையும் காடைத்தனத்தையும் அறிந்தால் தமது கல்லறையில் அங்கப்பிரதட்சணம் செய்யாமல் வேறு என்னசெய்யத் தோன்றும்? உலக அரங்கில் உள்ள குழப்பங்கள் நமது நாட்டுக்கும் மக்களுக்கும் ஆறுதல் அளிக்க முடியுமா?

அந்நிய ஆட்சியில் தேசபக்தி நிறைந்த தலைவர்கள் தங்கள் இனத்துக்கும் சமயத்துக்கும் உழைத்ததை இன்றைய வாலிபர்களுக்கு ஒரு புராணக் கதைபோல் தோன்றும். கல்வித்துறையிலே தேசிய உணர்ச்சியை ஊட்டிய அனகாரிக தர்மபாலாவும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும், அரசியலில் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் ஜேம்ஸ்பீரிஸ், சேர் பாரன் ஜயதிலகா, டி. எஸ். சேனநாயக்கா போன்றவர்களும் இனமத வேறுபாடின்றி நாட்டின் சுதந்திரத்துக்கு அயராமல் உழைத்தவர்கள். சுதந்திர இலங்கையில் இந்த ஒற்றுமையும் தேசிய உணர்ச்சியும் குழம்பின தன்மையால் நாடே மேலும் அவல நிலையில் ஊசலாடுவது மக்கள் கண்டிச் சிந்திக்கவேண்டிய விடயம். இந்த நிலை எங்கள் நாட்டில் மட்டுமல்ல பல புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளில் நிலவுகின்றது. இருந்தும் பல இலட்சக்கணக்கானவர்கள் கொடுத்த அழகிய இத்தீவில் மனிதன் சிறந்த நிலையிலிருந்து இறங்குவது பெரும்வேதனையளிக்கும் காட்சி. குடியரசு அரசியலமைப்பில் தமிழ் சகோதரர்களுக்கு இழைக்கப்பட்ட நீதிவழங்கத்தவறியது எங்கள் கடந்தகாலப் பெருமையை மாசுபடுத்துகிறது. அதேசமயம் தமிழ் மக்களின் குறைகளை நிவர்த்தி பண்ணும் பெரும்பணியில் ஈடுபட்ட தலைவர்கள் தேசபக்தியும் மொழிப் பற்றும் முரண்பாடற்ற ஒருமைப்பாடு காணத்தவறியது துரதிஷ்டவசமானது. வகுப்புவாதம் என்பது இளம்பிள்ளை வாதம் போன்ற கொடிய தொற்று நோய் என்பது மக்கள் இன்றைய அரசியல் அறிந்திருக்கவேண்டிய விடயம். இலங்கை சுகாதார சேவையினர் "போலியோ" என்ற பயங்கர இளம்பிள்ளை வாதம் பரவாமல் தக்க தடுப்பு மருந்துகளைக் கொண்டு நாட்டைப் பாதுகாப்பது நாமறிந்த விஷயம். அரசியல் போலியோவைப் பற்றி சிந்திப்பார் அரிதேனும் இலரே.

இன்று நாட்டின் முதல் நம்பர் எதிரி அரசியல் "போலியோ". எமது இளைஞர்களை இந்தக் கொடிய நோயிலிருந்து பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடன். அரசியல்வாதிகளை எடுத்ததற்கெல்லாம் கண்டிப்பது அழகல்லாவிருந்தாலும் இந்தப் பெரும் பணியை அவர்களிடம் நம்பிவிடலாமா?

தேசிய உணர்ச்சியின் பெறுபேறாக அமைந்த கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி போன்ற கல்விநிலையங்கள் நாட்டின் வருங்காலச் செல்வங்களான இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டியது அவசியம். பழமை போல் தமிழ் மாணவர்கள் ஆனந்தாக் கல்லூரியிலும் சிங்கள மாணவர்கள் யாழ் இந்துக்கல்லூரியிலும் கல்வி பயின்று நாட்டின் இருமொழிகளையும் இருகண்களாகக் கருதி தேசிய ஒருமைப்பாட்டுக்கு அடிகோல வேண்டியது அவசியம். இது முடியாத காரியமுமல்ல.

நீதியரசர் வெர்ணாண்டோவின் சமத்துவ புத்தியும் நாட்டுப்பற்றும் நிறைந்த பேச்சைக் கேட்ட எவருக்கும் இவ்வித சிந்தனை விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணுமென்று நம்பலாம்.

பசித்தவன் பழங்கணக்கு பார்த்தமை

இறந்துபோன எனது மாமியார் ஒருவர் நாற்பது வருடங்களுக்கு முன் வைத்திருந்த தினக் குறிப்புக் கொப்பி ஒன்று என் கைக்கு எட்டியது. அன்றாடம் நடந்த வரவு செலவு விபரங்கள் அதில் ஒழுங்காக எழுதப்பட்டிருந்தன. அவற்றைப் படிக்கப் படிக்க நாவூறியது. இப்படியும் ஒரு காலம் இருந்ததா என்று பெரும் வியப்பாயிருந்தது. அந்தக் காலம் இனிமேல் ஒருபோதும் வரமாட்டாது போலிருப்பதை நினைக்க நெஞ்சை வலித்தது.

அதில் காணப்பட்ட சில விலைவாசிகளை அப்படியே இங்கே தருகிறேன். வாசித்து மகிழுங்கள்! 4-7-32க்கும் 24-9-32க்குமிடையில் எடுக்கப்பட்ட குறிப்புகள்: அரைப் பறை நெல் அரிசி- ரூபா 1-62, அரை ரூத்தல் சீனி- 7 சதம், இருபது தேங்காய்- ரூபா 1-80, இரண்டு புடலங்காய் 4 சதம், கீரை- 2 சதம், கத்தரிக்காய்- 4 சதம், ஐந்து கோழி முட்டை- 20 சதம், மீன்- 15 சதம், இறால்- 2 சதம், ஆட்டிறைச்சி- 50 சதம், மூன்று சட்டி- 15 சதம், புகையிலை 6 சதம், வியூச்சி சீலை 5 யார்- ரூபா 6-25, ஆறரை யார் வோயில் துணி- ரூபா 5-40.

1938, 39 வரை எனது மாமியார் இந்த நாட் குறிப்புகளை மிகவும் ஒழுங்காக எழுதி வந்திருக்கிறார். அதற்குப் பின் அவை திடீரென்று நின்று போய் விட்டன. கொப்பியிலுள்ள மிச்ச ஒற்றைகளெல்லாம் பிளாங்கியாயிருக்கின்றன. என்ன காரணமென்று நினைக்கிறீர்கள்? 1939ம் ஆண்டு செப்டம்பரில் இரண்டாவது உலக யுத்தம் வந்துவிட்டது. அதைப் பின்தொடர்ந்து தட்டுப்பாடுகளும் கட்டுப்பாடுகளும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சேர்ந்தன. கப்பல் தடையும் வந்தது. இந்த லட்சணத்தில் என்ன கணக்கு எழுத வேண்டும் என்று எனது மாமியார் வெறுத்து விட்டார் போலத் தெரிகிறது.

அவர் எழுதாமல்விட்ட வேறு பல விலைவாசிகளும் இருந்தன. உதாரணமாக இன்று மூன்றுரூபா விற்கக்கூடிய கோழிக்குஞ்சு அப்பொழுது ஆறு சதம்தான். உங்களுக்குத் தெரியாவிட்டால் ஒரு பணமென்பது ஆறு சதத்தைக்குறிக்கும். கணக்கு வழக்கெல்லாம் பணத்தின் அடிப்படையில்தான் நடக்கும். எட்டுப்பணம் என்றால் அது ஐம்பது சதத்தைக் குறிக்கும். ஒருவருக்கு நாட் கூலி முக்கால்ரூபாய். பெண்களுக்கு ஆறு பணம். எங்கள் ஊரிலிருந்து யாழ்ப்பாணம் வந்துபோக (ஐந்தரை மைல்) வண்டிக்கூலி ஒரு ரூபாய்தான், கார்க்கூலி இரண்டு ரூபாய். கார்க்காரன் அவசரப்படுத்தமாட்டான். ஒருபகல் முழுவதும் நின்றாலும் கவலைப்படமாட்டான்.

ஐந்துபேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு காலையில் கோப்பி வைப்பதற்கு ஐந்து சதம் போதும். இரண்டு சதத்திற்கு உரலில் இடித்த நிறம் கோப்பித் தூள், மூன்று சதத்துக்கு ஒரு கோல் போன்ற மிடுவான சீனி.

பசித்தவன் பழங்கணக்கு பார்த்தமாதிரி நான் எனது மாமியாரின் நாட்குறிப்புக் கொப்பியைப் புரட்டிக் கொண்டு இப்படியான ஒரு பொற்காலம் இனி எக்காலமோ? என்று பெருமூச்சு விட்டேன்.

இனிமேல் ஒருபோதும் வராது என்றுகூறத்தோன்றுகின்றது. இப்படியேபோய்க் கொண்டிருந்தால் இதன் முடிவுதான் என்னவோ!

முன்னைவிட உணவுப் பொருள்களின் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்திருப்பது உண்மைதான், ஆனால் அதைவிடப்பன்மடங்கு அதிகரித்துவிட்டதே மக்கள் உற்பத்தி! தரிசாய்க் கிடந்த லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நெல்லும், தானியங்களும், மரக்கறிகளும், பழங்களும் விளைகின்றன. அதேசமயம் அவற்றைவிழுங்கும் வாய்களும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிவிட்டன.

1932-ம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை சுமார் 50 லட்சம்தானிருக்கும். ஆனால் இன்று இத்தொகை ஒன்றரைக்கோடியை எட்டிவிட்டது.

நவீனநோய்த்தடுப்பு முறைகளும், நோய்களைக் குணப்படுத்தும் நவீனமருந்துகளும் மரண விகிதத்தை எவ்வளவோ குறைத்துவிட்டன. ஆனால் பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் கணிசமான அளவு பலனளித்ததாகத் தெரியவில்லை. இந்தியா முதலிய நாடுகளில் சட்டரீதியாக கருத்தடை முறைகள் கையாளப்படுவது போல இலங்கையில் நடப்பதில்லை. இதனால் வருங்காலத்தில் நிலைமை இன்னும் வரவர மோசமாகுமென்றே தெரிகிறது.

நாடு சுதந்திரம் பெற்ற பின்பு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த உணவுக்கிழங்கு, மிளகாய் போன்ற பொருட்கள் தடைசெய்யப் பட்டதும் இதற்கு இன்னுமோர்காரணமாகும்.

ஆகையால் 1932-ம் ஆண்டில் நிலவிய பொருளாதார சுபீட்சம் இனிமேலும் வரக்கூடுமென்று நினைப்பது 'மூடன் செம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட' கதையாய்த்தான் முடியுமோ?

— வழிப்போக்கன்

பெண்ணின் மரணத்தில் பொலிசாருக்கு சந்தேகம்

மாவிட்டபுரம், திங்கள்

சேந்தாங்குளத்தில் அநாதரவாகக் கிடந்த பெண்ணின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளது.

காங்கேசன் துறைப் பொலிஸ் பகுதிக்குட்பட்ட இளவாலையையடுத்த சேந்தான்குளம் பகுதியில் பெண் ஒன்றின் உடலம் தரைக்குத்த நிலையில் கிடந்ததைக் கண்டவர்கள் காங்கேசன்துறைப் பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர்.

இப்பெண்ணின் மரணம் குறித்து காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இப்பெண் தற்கொலை செய்தாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்ற பொலிசாரிடையே கேள்வி எழுந்துள்ளது.

இப்பெண் மாதகலைச் சேர்ந்தவர் என்றும் 23 வயதுடையவர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இப்பெண்ணின் உறுப்புகள் இரசாயன பரிசோதனை செய்ய வைத்தியர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கலை விழா

யாழ்ப்பாணம், செவ்.

கொடிகாமம் சேர் பொன். இராமநாதன் கழகத்தின் மூன்றாவது ஆண்டு முத்தமிழ் கலைவிழா இம்மாதம் 30-ம் தேதி நடைபெறவிருக்கிறது.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் பண்டிதர் வே. கந்தையானார் தலைமையில் [illegible] நடைபெறும் இவ்விழாவில் இன்னிசை, நடனம் நாடகம் மற்றும் பல நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

குவிப்...:.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

09 B 0392   23 B 0318
08 C 0682   12 C 0858
16 C 0134   24 C 0011
01 D 0261   10 D 0238
19 D 0513   19 D 0562
24 D 0955   28 E 0276
28 E 0506   04 F 0299
13 F 0044   18 F 0246
04 G 0559   10 G 0805
11 G 0937   12 G 0663
20 G 0925   10 H 0764
19 H 0502   29 H 0200
11 J 0853   15 J 0925
20 J 0799   22 J 0124
22 J 0814   24 J 0235
24 J 0535
04 K 0202   07 K 0598
10 K 0828   12 K 0283
13 K 0180   17 K 0661
23 K 0191   25 K 0986
28 K 0100   28 K 0527
02 L 0174   11 L 0463
17 L 0301   15 M 0289
25 M 0228   03 N 0532
07 N 0587   02 O 0512
12 O 0957   15 O 0528
18 O 0291   12 P 0161
09 Q 0694   04 R 0327
18 R 0998   29 R 0827
02 S 0098   06 S 0171
15 S 0564   16 S 0044
16 S 0125   17 S 0646
20 S 0178   21 S 0935
23 S 0853   23 S 0985
14 T 0151   14 T 0519
21 T 0251   03 U 0829
06 U 0475   24 U 0294
17 V 0420   16 W 0551
03 X 0014   04 X 0781
12 X 0798   13 X 0427
17 X 0236   20 X 0228
24 X 0828   27 X 0839
06 Y 0257   09 Y 0314
10 Y 0051   18 Y 0179
19 Y 0889   21 Y 0690
01 Z 0902   07 Z 0251
10 Z 0651

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

மரண அறிவித்தல்

அல்லாரை செல்லையா மாஸ்டர்

முன்னாள் கச்சாய் கிராமசபைத் தலைவரும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் உப அதிபருமான அல்லாரை எஸ். கே. செல்லையா நேற்றிரவு காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிச்சடங்குகள் இன்று செவ்வாய்க்கிழமை (19-9-72) பிற்பகல் 3 மணிக்கு அல்லாரை பார்வதி வாசத்தில் நடைபெறும்.

3438

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.